(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு, மின்சாரத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே (தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்.) உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

7. நடைமுறைக் கேள்விகள்

(அ) ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப ஓர் உறுப்பினர் எழுந்துநின்ற போது, அதற்கு வாய்ப்பளிக்காமலேஅடுத்த பொருளை பேரவைத் தலைவர் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டது குறித்து

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டு நின்று கொண்டே இருக்கிறேன். நீங்கள் அதற்குள் வேறு சப்ஜெக்டுக்குப் போய்விட்டீர்கள். ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். நான் விளக்கம் கேட்டபோது ஒவ்வொன்றாகக் கேட்டால் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள். அதற்காக நான் கேட்க ஆரம்பித்தேன். அதற்குள் என்னைப் பேசவிடாமல் செய்துவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் விரும்பினாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நம்முடைய விதி 41-ல் விளக்கம் பெறுவதற்கு ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் தான் கேட்கலாம் என்று தெளிவாக இருக்கிறது. அதற்குமேல் அமைச்சரவர்கள் விளக்கம் சொல்லத் தயாராக இருந்தாலும் பேரவைத் தலைவர் மறுக்கலாம். நீங்கள் கேட்டதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.